★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 16உ வெள்ளி (29—6—56) ★ ★ வெளியீடு: ஆனி 17உ சனி (30—6—56) [இதழ் 13

அமெரிக்காவின் புதிய [redacted]

வாஷிங்டன், ஜூன் 28—

நீர் மூழ்கிக் கப்பல்கள் எதிர்ப்புப் போரையே புரட்சிகரமாக மாற்றக்கூடிய புது இரகசிய ஆயுதத்தை அமெரிக்கா வைத்திருக்கிறதாம்!

இந்த இரகசிய ஆயுதம், போர் கப்பல்களிலிருந்து இயங்கக்கூடிய 'ராக்கெட்' வெடிகுண்டு வகையைச் சேர்ந்ததென்றும், 800 கிலோமீட்டர் தூரம் பாய்ந்தோடக்கூடியதென்றும், விமானத் தாங்கிக் கப்பல்களிலிருந்து செல்லும் வெடி விமானங்கள் நீர்வளிக் குண்டுகளைப் போடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் ஊழியர்கள் நிலை!

நல்லுறவு முறிகிறது—மனக்கசப்பு வளருகிறது

'மிரட்டலுக்குப் பணிய மாட்டோம்'

'கூண்டோடு கைலாசம்' என்றால் தயார்தான்!

உருவான நிவாரணம் இன்றி ஒருமனதான முடிவை மாற்ற இயலாது!

சென்னை சர்க்காருக்கு ஊழியர்கள் அறைகூவல்

சென்னை, ஜூன் 28—

'சர்க்காரின் மிரட்டலுக்குப் பணியமாட்டோம்' என்று பதிலிறுத்து விட்டனர், சர்க்கார் ஊழியர்கள்!

"ஒட்டு மொத்தமாக—'கூண்டோடு கைலாசமாக'—பல்லாயிரக் கணக்கான சர்க்கார் ஊழியர்களையும் தண்டிப்போம் என்று சர்க்கார் கூறினால், செய்து மகிழட்டும்; அதற்காகப் பயந்து, ஒருமனதாக மேற்கொண்ட முடிவை, உருவான பலன் ஏதும் பெறாமல் மாற்றிக் கொள்வதற்கில்லை; எனவே, ஜூலை 2-ந் தேதியன்று, ஊழியர்கள் நிச்சயமாக சம்பளம் வாங்க மறுத்து விடுவார்கள்" என்று ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

சர்க்கார் ஊழியர் சங்கத் தலைவர் விடுத்துள்ள அறிக்கை கூறுவதாவது:—

"சர்க்கார் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பைக் கவனித்தோம். நாங்கள் சம்பளம் வாங்க மறுப்பது என்று வெளியிட்டுள்ள திட்டத்தை தவறாகப் பொருள் கொண்டிருப்பதற்காக, வருந்துகிறோம்.

"சம்பளம் வாங்க மறுப்பது, நேரடி நடவடிக்கைக்கூட அல்ல; அல்லது, கிளர்ச்சி பர்தப்படுத்துவதும் ஆகாது.

"வாழ்க்கைக்குத் தேவையான அளவு கூலி தரப்படாமல் எங்களில் பெரும்பாலானோர், ஏற்கனவே சர்க்காரால் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற உண்மையை சர்க்காருக்கும், மக்களுக்கும் உணர்த்தவே நாங்கள் சம்பளம் வாங்க மறுப்பது என்ற இயக்கத்தைத் துவக்கியுள்ளோம்.

"உண்மையில், சர்க்கார் தரப்பில் ஏதேனும் மனமாற்றம் நிகழுமானால், நாங்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் அனைத்தையும் ரத்து செய்துவிடச் சித்தமாயுள்ளோம்.

"அனுதாபம் தெரிவிக்கும் — ஆறுதல் கூறும் சில வார்த்தைகள் மட்டும் போதுமானவை அல்ல; ஏனெனில், நாங்கள் ஏதேனும் உருவான நிவாரணம் பெறவேண்டுமென்பதில் கவலையுடையவர்களாயிருக்கிறோம்.

"எங்களது முடிவால், சர்க்கார் வேலைகள் சுமுகமாக நடைபெறுவது தடைபடும் என்று கூறுவது நியாயமானதல்ல; ஏனெனில், நாங்கள் எப்போதும் விசுவாசமுள்ள ஊழியர்களாகவே இருந்துவந்திருக்கிறோம். எந்த விதமான முறை பிறழ்ந்த நடவடிக்கை குறித்தும் நாங்கள் சிந்தித்ததில்லை—சிந்திக்கவும் மாட்டோம். எந்த வித அன்னிய தூண்டுதலாலோ, அரசியல் நோக்கங்களாலோ, சங்கம் இந்த முடிவினை மேற்கொள்ளவில்லை. வெளியார் எவரின் தலையீட்டையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

"என்றாலும், நாங்கள் நடத்தவிருக்கிற சம்பள மறுப்புப் போராட்டம், சட்டவிரோதமானது—ஒழுக்கக்கேடானது என்று சர்க்கார் கருதுமானால், 'கூண்டோடு கைலாசமாக' எல்லா ஊழியர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளட்டும் — அதனால் மகிழ்ச்சி பெறட்டும்; உருவான ஏதேனும் செய்யப்பட்டாலன்றி, ஊழியர்கள், ஒரு மனதாக மேற்கொண்ட முடிவை மாற்றிக்கொள்வதற்கு இல்லை"

சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா

ரூ. 1-கோடி மானிய உதவி

பம்பாய், ஜூன் 28—

அடுத்த ஆண்டு கொண்டாடப்படும் சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக் கழகங்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி, பல்கலைக் கழக மானியக் குழு இம்மூன்று பல்கலைக் கழகத்திற்கும் தனித்தனியே ரூ. 1-கோடி வீதம் மானிய உதவி அளிக்குமாம். பல்கலைக் கழகங்களின் விரிவுபடுத்தும் திட்டங்களுக்கே இத்தொகை தரப்படுகிறது என்ற தகவலை பம்பாய் பல்கலைக் கழகத் துணைத் தலைவர் ஜான் மத்தாய் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு அலுவலகம்

தாக்கப்பட்டது!

வார்சா, ஜூன் 28—

போலந்து நாட்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைமை அலுவலகத்தை இன்று கூட்டம் கூட்டமாகச் சென்று மக்கள் தாக்கினர் என்று தெரியவருகிறது.

மேலும், 3 இலட்சத்திற்குமேல் மக்கள் தொகையுடைய போஜ்ஜம் என்ற நகரத்தில், வேறு பல ஆர்ப்பாட்டங்களிலும் மக்கள் ஈடுபட்டனர். என்றும் இதற்கான காரண விளக்கம் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

புதுடில்லி, ஜூன் 28—

அமெரிக்காவிடமிருந்து 5 ஆண்டுகளில் 30 இலட்சம் டன் கோதுமை பெற, அமெரிக்காவுடன் இந்திய உணவு இலாகா பேச்சுவார்த்தை துவக்கியுள்ளதெனத் தெரிகிறது.

ஆர். எம். எஸ். ஊழியர்களும் சம்பளம் வாங்க மறுப்பர்

டில்லி சர்க்கார் போக்கை எதிர்த்து சென்னையில் நடவடிக்கை

போக்குவரத்துப் 'படி' மறுக்கப்பட்டதின் விளைவு!

சென்னை சர்க்கார் ஊழியர்கள், தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக ஜூலை 2-ல், சம்பளம் வாங்க மறுப்பது என்று முடிவு செய்திருக்கும் நேரத்தில், சென்னை தபால் இலாகாவைச் சேர்ந்த ஆர். எம். எஸ். (சார்டிங் பிரிவு) ஊழியர்களும் ஜூலை 2-ல் சம்பளம் வாங்க மறுப்பதென முடிவு செய்திருக்கின்றனர்.

ஆர். எம். எஸ். ஊழியர்கள், தங்களுக்குக் கடந்த 1949 முதல் கிடைத்துவந்த போக்குவரத்து (மீனம்பாக்கம் விமான நிலைய, அஞ்சல் பிரிப்பக அலுவலகத்திற்குப் போய்வரத் தரப்பட்டு வந்த) 'படி' திடீரென இந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டதை எதிர்த்தே இந்தச் சம்பள மறுப்புப் போராட்டம் துவங்குகின்றனர்.

சென்னை அஞ்சல் பிரிப்பகத்தின் (சார்டிங் டிவிஷன்) ஒரு பகுதி மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தில் இயங்குகின்றது. நகரத்துக்கு வெளியில் உள்ள அவ்விடத்துக்கு, வேலையில்லாத வேளைகளில் எல்லாம் சென்று பணியாற்றும் ஊழியர்களுக்கு, வீட்டு வசதி போன்ற பல வசதிகளைச் செய்வதாக ஆசை காட்டிய இலாகா அதிகாரிகள், அவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றாதோடு 1949 ஏப்ரல் 1-ந்தேதி முதல் சென்னையிலிருந்து அங்கே சென்று வேலைசெய்பவர்களுக்குக் கொடுத்து வந்த இரயில்வே சீசன் 'டிக்கெட்' தொகையைக்கூடக் காரணம் ஏதும் காட்டாமல் 1956 பிப்ரவரி 1-ந்தேதி முதல் நிறுத்தி விட்டதாகவும், அதைப்பற்றி எவ்வளவு முறையிட்டும் அமல இந்திய அதிகாரிகள் கவனிக்கவில்லை என்றும் சென்னை ஆர். எம். எஸ். ஊழியர்கள் குறைப்படுகிறார்கள். சென்னை போஸ்ட் — மாஸ்டர் ஜெனரல்கூட, 'அவர்கள் கோரிக்கை — அதாவது, சீசன் டிக்கெட் தொகையை மீண்டும் தரவேண்டும் என்பது முறையானது' என்று ஒப்புக்கொண்டதோடு, மேலதிகாரிகளுக்கும் எழுதியிருக்கிறாராம்.

பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலுள்ள வானூர்தி நிலைய அஞ்சல் பிரிப்பகங்களில் வேலை செய்பவர்களுக்கு, இலாகாவே மோட்டார் வசதி செய்து கொடுத்திருப்பதுபோல், சென்னை ஊழியர்களுக்கும் செய்துகொடுக்க

(4-ம் பக்கம் பார்க்க)

வாக்காளர் பட்டியல்கள் திருத்த காலம் நீடிப்பு

★

தற்போது தயாரிக்கப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல்கள், அடுத்துவரும் பொதுத்தேர்தலில் பயன்படுத்தப்படுமாதலால், தகுதியுள்ளவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளுவதற்குப் போதிய அவகாசம் தரப்படுவதற்குக் கீழ்க்காணும் சட்டசபைத்தொகுதிகளைப் பொறுத்தவரையில்மனுச் செய்து கொள்ளவும், ஆட்சேபணைகள், திருத்தங்கள் ஆகியவற்றைத் தெரிவித்துக் கொள்ளுவதற்குமான காலவரையறையைத் தேர்தல் குழு நீடித்திருக்கிறது.

அறந்தாங்கி (தஞ்சை மாவட்டம்) டி. பாலூர்; ஜெயங்கொண்டான், அரியலூர் (திருச்சி மாவட்டம்); முதுகளத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்); மதுரை கிழக்கு, மத்திய மதுரை, திருப்பரங்குன்றம், நிலக்கோட்டை, மேலூர் (மதுரை மாவட்டம்)—ஜூலை 12.

கரூர், குளித்தலை (திருச்சி மாவட்டம்)—ஜூலை 14.

சிதம்பரம் (தென்னாற்காடு மாவட்டம்)—ஜூலை 17.

செய்யாறு (வடஆற்காடு மாவட்டம்)—ஜூலை 19.

பாடியக்கிரகாரம் (வடஆற்காடு); அதிராம்பட்டணம், பட்டுக்கோட்டை (தஞ்சைமாவட்டம்)—ஜூலை 24.

ஓமலூர் (சலம் மாவட்டம்)—ஜூலை 25.

உடுமலைப்பேட்டை (கோவை மாவட்டம்)—ஜூலை 26.

தகுதியுள்ளவர்கள், தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தேவையான நமூனக்கள் அந்தந்த மாவட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், முனிசிபல் கமிஷனர்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள், கிராம அதிகாரிகளிடம் இலவசமாகக் கிடைக்கும்.

கிளைக் கழகத் தோழர்களே! உங்கள் ஊரில் வயதுவந்தோர் அனைவரையும் உடன் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளுமாறு தூண்டுங்கள்!

—தலைமைக் கழகம்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—6—'56 வெள்ளி

கடமையை மறவாதீர்

பொதுமக்களுக்கும் கழகத்திற்கும் தொடர்பிருப்பது ஒன்று மட்டுமே, நமது இலட்சியப் பரவலுக்குப் போதுமானது என்ற அடிப்படையில் நாம் இதுவரையில் உழைத்து வந்தோம். பொதுமக்களில் குறிப்பிட்டப் பகுதியினருக்கு அவ்வப்பொழுது ஏற்பட்டு வரும் வாழ்க்கை நெருக்கடிகளைப் போக்கும் வகையில் பாடுபட்டால் மட்டுமே போதுமானது என்ற நோக்கத்திலும் நாம் இன்றுவரை உழைத்து வந்திருக்கிறோம்.

பொதுக்கூட்டம், மாநாடு, நாடகம், கலையரங்கு ஆகிய, நாம் மேற்கொண்டு வந்தத் துறைகள் அனைத்தும், மேற்குறிப்பிட்ட உட்கருத்தின் விளைவேயாகும்.

இனியும், அந்த அளவுடன் நாம் திருப்தி கொள்வதற்கில்லை. மேலும் ஒரு முக்கியமான இனத்திலும் நாம், நமது கவனத்தையும் நேரத்தையும் செலவிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சாதாரண பொதுமக்களின் ஆதரவைப் பெற நாம் இதுவரைச் செய்துவந்த பணிகளுடன், இப்புதிய முக்கியமான பணியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பணியில் நாம் காட்டும் விழிப்புணர்ச்சியையும், திறமையையும், முயற்சியையும் பொறுத்துத்தான் பொதுத் தேர்தலில் நமது கழகச் சார்பினர் வெற்றி பெறுவதும் அமைந்திருக்கிறது.

வாக்குரிமையின் புனிதத்தையும், இன்றியமையாமையையும் குறித்து கற்றறிந்த சிலர் மட்டுமே தெரிந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. வாக்குரிமையின் தேவையை ஓரளவிற்கு நகர மக்களும் உணர்ந்து வருகின்றனர். அந்தச் சிறிய அளவிலும்கூட உணர்ந்து கொள்ளாது பேரூர், சிற்றூர் மக்கள் இன்றும் இருந்துவருகின்றனர் என்பது நாம் கண்டு வரும் காட்சியாகும்.

குறிப்பிட்ட ஒரு பொருளின் முழு சக்தியும் உணரப்படுகிற வரையில், அதைப்பெற எண்ணவும், அதற்காக ஆர்வத்துடன் முயற்சிக்கவும் ஒருவர் முன்வரமாட்டார் என்பது முக்காலும் உண்மையாகும். எனவே, வாக்குரிமையின் முழுப்பொருளும் பொதுமக்களுக்கு விளக்கமாக உணர்த்தப்பட்டால் அல்லாது, தாங்களாக அதைப்பெற முன்வருவதும் எதிர்பார்க்க முடியாததாகும்.

ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரம் முழுதும் அந்த நாட்டு மக்களின் கையிலேயே அடைக்கலமாக இருக்கிறது. அப்படி தங்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கிற அதிகாரத்தைக் கொண்டு, தங்களுக்கு விருப்பமான ஒரு ஆட்சியை நிறுவிக் கொள்ளுகிறார்கள் என்பது தற்கால அரசியல் சித்தாந்தம்.

தங்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கிற அதிகாரத்தை, தாங்கள் ஒவ்வொருவரும் இயல்பாகக்கொண்டிருக்கின்ற வாக்குரிமை மூலம், சில ஆண்டுகளுக்கு ஒருமுறை செயல்படுத்தி, குறிப்பிட்ட ஒரு ஆட்சியை பொதுமக்கள் அமைத்துக்கொள்ளுகிறார்கள் என்பது நடைமுறை. இதனால் வாக்குரிமையின் முழு ஆற்றல் விளக்கமாகத் தெரிவதுடன், அதைப் பெறுவதிலும், பயன்படுத்துவதிலும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக இருந்துதீர வேண்டிய பொறுப்புணர்ச்சியும் தெளிவாகிறது.

தங்களிடம் இயல்பாக அமைந்துள்ள அதிகாரத்தை, தாங்கள் ஒவ்வொருவரும் பெற்றுள்ள வாக்குரிமை மூலம் தான், வெளிப்படுத்த அல்லது செயல்படுத்த வேண்டும். வாக்குரிமையைப் பெறத் தவறிவிட்டால், இயல்பாகத் தம்மிடம் உள்ள அதிகாரத்தை, ஒருவரால் தம் விருப்பப்படி செயல்படுத்த முடியாது விழிக்க வேண்டிவரும் என்பது பெறப்படுகிறது. எனவே, வாக்குரிமையை ஒவ்வொருவரும் பெற்றிருக்கவேண்டியது முதல் தேவையாகிறது.

இருபத்தோரு வயதுடைய எவரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளலாம். இந்த ஏற்பாட்டை வேண்டா வெறுப்பாகக் காங்கிரஸ் கட்சி செய்திருக்கிறது.

வாக்காளர் பதிவுகாலம் முடிவடைந்துவிட்டது. இருந்தாலும் இப்பொழுது சில ஊர்களில் வாக்காளர் பட்டியலில் திருத்தஞ் செய்வதற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த கால அளவு நீடிக்கப்படுகிறது. மேலும் தொடர்ந்து மற்றப் பகுதிகளுக்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தஞ் செய்யும் கால அளவுநீடிக்கப்படக்கூடும்.

அறந்தாங்கி, அரியலூர், முதுகளத்தூர், மதுரை கிழக்கு, மத்திய மதுரை, கரூர், சிதம்பரம் செய்யாறு, பட்டுக்கோட்டை, ஓமலூர் போன்ற சட்டசபைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியலில், விடுபட்டுப் போனவர்களின் பெயர்களைச் சேர்க்கவும் தவறாகப் பிரசுரிக்கப்பட்டவாக்காளர் பெயர்களைத் திருத்தஞ் செய்யவும் கால கெடுவு நீடிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிய முழு விளக்கம் தெரிய வேண்டியவர்கள், அந்தந்தத் தொகுதியைச் சேர்ந்த அரசாங்க நிலவரி அதிகாரிகளை அணுகி அறிந்து கொள்ள வேண்டும்.

எந்தெந்த ஊரில் இத்திருத்தக் காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்தும், வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வதற்குரிய முறை பற்றியும் விளக்கிக் கூறப்பட்டுள்ள அரசாங்க அறிக்கை ஒன்று, இவ்விதழின் வேறு ஒரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆங்காங்கே உள்ள கழகத் தோழர்கள், அவ்வப்பகுதியில் விடுபட்டுள்ள வாக்காளர்களைப் பதிவு செய்வதை, தங்கள் முதற் கடமையாகக்கொள்ள வேண்டும். விடா முயற்சியுடன் இப்புனிதமானக் கழகப் பணியில் உடனடியாக ஈடுபடுமாறு, ஒவ்வொரு தோழரையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

பாகிஸ்தான் மக்கள் இந்தியா வரத் தடை?

புதுடில்லி, ஜூன் 26—

இவ்வாண்டு துவக்கத்தில் போபாலில் நடைபெற்ற சம்பவங்கள், சென்ற ஆண்டு சுதந்திர நாளன்று ஐதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் காரணமாக பாகிஸ்தான் மக்கள் இந்தியாவுக்குள் வருவது—இங்கு தங்கியிருப்பது போன்றவற்றில் சில கட்டுப்பாடுகள் விதிப்பதென்று இந்தியப் பேரரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. மக்கள் சபையின் அடுத்தக் கூட்டத்தில் இதற்காக ஒரு மசோதா கொண்டுவரப்படுமென்றும் தெரியவருகிறது.

நான்கு நாகர்கள் பலி

புதுடில்லி, ஜூன் 27—

நாகர்மலையில் சென்ற வாரம் புலோ பொடோ என்ற இடத்தில் நாகர் கிளர்ச்சிக்காரர்களுக்கும், இராணுவப் போலீசாருக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பில் இராணுவப் போலீசாரால் 4 நாகர் கிளர்ச்சிக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

'கூட்டுச் சேரமாட்டோம்'

புதுடில்லி, ஜூன் 27—

"பிரஜா சோஷலிஸ்டு கட்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குமிடையே அடிப்படையான வித்தியாசங்கள் இருப்பதால் இரு கட்சிகளுக்கிடையே தேர்தல கூட்டு இயலாதது,"

என்று, பிரஜா - சோஷலிஸ்டுக் கட்சிக் கூட்டுச் செயலாளர் பரீத் அன்சாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறுகிறாராம்.

சிறைக்கைதிகள் சீர்திருத்தம்

அர்ரா, ஜூன் 26—

கைதிகளைச் சீர்திருத்தம் துறையில் அரசாங்க நிருவாகத்தின் கீழ், பீகாரைச் சேர்ந்த அர்ரா சிறையில் உள்ள கைதிகளுக்கு ஒரு 'பஞ்சாயத்து' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் சிறைக் கைதிகளே உறுப்பினராக உள்ளனர்.

பிம்பரியிலுள்ள சர்க்கார் பெனிசிலின் உற்பத்திச்சாலை, சென்ற மே மாதத்தில், 11,30,000 மெகா யூனிட் பெனிசிலின் உற்பத்திச் செய்தது; அதாவது, 1955 ஆகஸ்டில் உற்பத்தி துவங்கியதிலிருந்து இதுவே உச்ச அளவு உற்பத்தியாகும்.

இந்தியாவில் தற்போதுள்ள தொழில்களை விரிவாக்குவதற்காக 1955-56-ல், 316 லைசென்சுகள் வழங்கப்பட்டன; 1954—55-ல் கொடுக்கப்பட்ட லைசென்சுகளின எண்ணிக்கை 226.

4,000 விதைப் பண்ணைகளை நாட்டில் நிறுவுவதற்குத் திட்டம்

உற்பத்தி இலட்சிய அளவை அதிகப்படுத்த முயற்சி

நடைமுதல் ஆண்டிற்கு ரூ. 16,25,00,000 தேவைப்படுமெனமதிப்பு

புதுடில்லி, ஜூன் 28—

மாநிலத் திட்டங்களில் விதை உற்பத்திப் பெருக்கத்திற்காக 3,715 பண்ணைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தி இலட்சிய அளவை இப்போதுள்ள 18 சதவிகித அதிகரிப்பிலிருந்து கூடுதலாக்க முயற்சிக்க வேண்டுமானால், குறுகிய காலத்துக்குள் இன்னும் அதிக விதைப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கருதப்படுகிறது. ஒவ்வொரு அபிவிருத்தித் தொகுதியிலும் ஒரு பண்ணை வீதம் இருக்க வேண்டுமானால் இவ்வாறு செய்வது அவசியம்; நாட்டில் ஏற்கனவே 1,200 அபிவிருத்தி தொகுதிகள் இருக்கின்றன; இவ்வாண்டில் இன்னும் பல தொகுதிகள் ஏற்படும்; எனவே, இரண்டாவது திட்டத்தின் முதல் இரு ஆண்டுகளில் 2,000 விதைப் பண்ணைகளை ஏற்படுத்துதது அவசியமென்று கருதப்படுகிறது. மூன்றாவது வருடத்தில் 1,000 பண்ணைகள் ஏற்படுத்தப்படலாம்.

1956-58 கால அளவில், 4000 விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டால், 20 கோடி ஏக்கரா பரப்பளவுக்கு அவை சேவை செய்யுமென்றும், அந்த ஏற்பாட்டின் மூலம் உற்பத்திச் சக்தி 36 இலட்சம் டன் அதிகரிக்குமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது வருடத்தில் ஏற்படுகிற 10,00 பண்ணைகள் மூலம் அதிகப்படியாக 5 கோடி ஏக்கராக்களுக்குப் பயன் ஏற்படும். 1960—61-ம் ஆண்டில் அதிகப்படியாக 90 இலட்சம் டன் மகசூல் கிடைக்கும்.

முதலில் உத்தேசித்துள்ளபடி, ஒவ்வொரு பண்ணையிலும் 2,500 மணங்கு விதைகளைச் சேமிக்க வசதியிருக்கும், திட்ட இலட்சிய அளவுகளை அதிகப்படுத்துவதினால் இன்னும் அதிக அளவுக்கு விதை சேமிப்புக் கிடங்குகள் வேண்டும். எனவே, நடைமுதல் செலவை அதிகப்படுத்த வேண்டியிருக்கும்; இப்போது அதற்கு ரூ. 16,-25,00,000 தேவைப்படுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

1955-ம் ஆண்டில் ஏற்பட்ட

விமான விபத்துக்கள்

புதுடில்லி, ஜூன் 27—

1955-ம் ஆண்டில், இந்தியாவில், பதிவான 24 விமானங்களுக்கும் 4 கிளைடர் விமானங்களுக்கும் விபத்துக்கள் ஏற்பட்டன. இவற்றில் 19 விபத்துக்கள் இந்தியாவிலும், மற்றவை இந்தியாவுக்கு வெளியேயும் ஏற்பட்டவையாகும் 6-விபத்துக்களில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது; அவ்விபத்துக்களில் விமானமோட்டும் சிப்பந்திகள் 17 பேரும், 16 பிரயாணிகளும் உயிரிழந்தனர். கிளைடர் விமானங்களுக்கேற்பட்ட விபத்துக்களில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

இழந்த மானத்தை மீட்க முயற்சியாம்!

தர்பங்கா, ஜூன் 27—

"சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுக்கு, அடுத்த பொதுத் தேர்தலுக்கு எவ்விதத்திலும் காங்கிரஸ் கட்சி 'டிக்கெட்'டுகள் வழங்கப்படமாட்டாது,"

என்று, காங்கிரஸ் கட்சித் தலைவா யு. என். தேபர் இங்கு நடைபெற்ற காங்கிரசு ஊழியர் கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

குந்தா நீர் மின்சாரத் திட்டத்தின் நோக்கம்

கனடா சர்க்கார் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் விவரம்

சென்னை, ஜூன் 29—

நீலகிரியில் ரூ 35 கோடி செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் மாநில சர்க்காரின் குந்தா நீர் மின்சாரத் திட்டத்தை மத்திய நிதி மந்திரி சிந்தாமண் தேஷ்முக், இன்று துவக்கிவைக்கிறார்

8,000 அடிக்கு மேலேயுள்ள சிகரங்களில் உற்பத்தியாகி வரும் நதி நீரை வீணாக்காமல் தேக்கிப் பயன்படுத்துவதே திட்டத்தின் நோக்கமாகயிருக்கிறது.

18 ஆயிரம் கிலோவாட்ஸ் மின்சாரம் உற்பத்திசெய்ய திட்டமிடப்பட்டிருக்கும் இத்திட்டம், கனடா சர்க்கார் உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

குந்தா பள்ளத்தாக்கு, நீலகிரியில், பைக்காரா பள்ளத்தாக்கிற்கு தென் கிழக்கில் இருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், 4 கட்டங்களில், 3 மின்சார நிலயங்களில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இரு மின்சார நிலயங்கள் நிர்மாணிப்பதற்கான முதல் இரு கட்டங்கள் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது; அதற்கான வேலைகள் தற்போது மேற்கொளளப்படவிருக்கிறது.

தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகம்

வழக்குத் தொடரப்பட்டோர் பற்றிய விபரம்

கடந்த பிப் 20-ல் நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தில், தம்மம்பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து மொத்தம 25 தோழர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, இடையிலே 9 தோழர்களை 'குற்றவாளிகளல்லர்' என விடுதலை செய்யப்பட்டனர்.

எஞ்சிய 16 தோழர்களின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 19 தடவை வழக்கு ஒத்திவைக்கப்பட்டு, 25—6—56-ல தீர்ப்பு கூறப்பட்டது.

தோழர் இராமலிங்கம் என்பவர் இன்னும் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்றுவருவதால் இவரைத் தனியாக விசாரித்து, தீர்ப்பு வழங்கப்படும்.

வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் :

1. இராமலிங்கம் — (மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்றுவருகிறார்); 2. பெரியசாமி, 3. பொன்னுசாமி, 4. பாண்டுரெங்கன்—(இம் மூவருக்கும் கோர்ட் கலையும்வரை தண்டனை விதிக்கப்பட்டது); 5. சீதாராமன், 6. இராமசெயம். 7. துரைசாமி, 8. வையாபுரி, 9 சந்திரசேகரன், 10. ஜெகன்னாதன், 11. சீனு என்னும் அருணசலம், 12. அப்துல் மஜீத், 13. இராமசாமி, 14. சந்திரன், 15. நடராசன், 16 இராமானுசம் —இவர்கள் அனைவரும், 'குற்றவாளிகள் அல்லர்' எனத் தீர்ப்புக் கூறப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

17. சிங்காரம், 18. சம்புலிங்கம், 19. ராசு, 20. தம்பன்பண்டாரம், 21 கிருஷ்ணன், 22. துரைசாமி, 23. மாணிக்கம், 24. வெங்கடாசலம், 25. கஞ்சமலை—இவர்கள் அனைவரும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இடையிலேயே விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

மரண தண்டனையை ரத்து செய்ய!

டெல்லி ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 28—

மரண தண்டனையை ரத்து செய்வது பற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருவதாக நம்பகமாகத் தெரிய வருகிறதென்று, செய்தியொன்று கூறுகிறது.

இதுபற்றி மாநில சர்க்கார்களின் கருத்தை அறிவதற்கு நகல் யோசனை அனுப்பப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறதாம். மாநில சர்க்கார்களின் கருத்தை அறிந்த பின்பு, இதுபற்றி ஒரு முடிவுக்கு வரக்கூடுமெனத் தெரிகிறதாம்.

இந்திய அரசாங்கத்தின் இந்த யோசனை ஏற்கப்படுமானால், மரண தண்டனைக்கு வழி கோலுகின்ற இ. பி. கோ. 302, 303, 305, 396 பிரிவுகளுக்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டிய நிலை ஏற்படுமாம்.

அச்சுத் தொழிலாளர் சங்க ஆண்டு விழாவில் 'நம் நாடு' இதழுக்குப் பாராட்டு

சென்னை 'கமர்லியல்' அச்சகம், மற்றும் வெளியீட்டு அலுவலகத் தொழிலாளர் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழா 25—6—56 மாலை 6-15 மணியளவில், 'மாடர்ன் கபே' மாடியில் நடைபெற்றது.

சங்கச் செயலாளர், ஆண்டு அறிக்கை படித்துவிட்டு, வரவு-செலவுக் கணக்கையும் தாக்கல் செய்தபின், கூட்டத்திற்கு சங்கத் தலைவர் தோழர் கே. எஸ். ஜானகிராம் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தலைவர் முன்னுரையில், அச்சுத் தொழிலாளர் நிலைபற்றியும், சங்கத்தின் நிர்வாகம் பற்றியும் எடுத்துரைத்துவிட்டு, சில தீர்மானங்களைக் கொண்டுவந்தார். அவை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானது—விலைவாசிகள் விஷம்போல ஏறுவதை சர்க்கார் உடனடியாகத் தடுத்து நிறுத்தி, விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதாகும். மற்றும், விலைவாசிகள் உயர்வுக்கு ஒப்ப தொழிலாளர்களுக்கு கிராக்கிப்படி உயர்வு வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின், சென்னை அச்சுத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் எ. கோவிந்தசாமி (கம்யூ.), அச்சுத் தொழிலாளர் வேலை நிலைகள், சம்பள விகிதங்கள் முதலியன பற்றிப் பேசிவிட்டு, தொழிலாளர்கள் பருத்தி சூதாட்டத்தில் ஈடுபட்டு, தங்களுக்குக் கிடைக்கும் குறைந்த ஊதியத்தையும் பாழாக்கிக்கொள்ளக்கூடாது என்று கூறினார்.

அடுத்து, தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் பேசுகையில், தொழிலாளர்கள் பருத்திச் சூதாட்டத்தில் ஈடுபட்டு கைப்பொருளைப் பறிகொடுக்கலாகாது என்று தோழர் கோவிந்தசாமி கூறியதைக் குறிப்பிட்டுக் கூறியதாவது:—

"உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் தரப்படாததின் மூலம், தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறார்கள்; அவர்கள் உழைப்பு சுரண்டப்படுகிறது; இது கண்ணுக்குத் தெரியாமலேயே, கையால் தொடாமலேயே, நியாயமாகக் கிடைக்க வேண்டியது, கிடைக்காமல் போகும் நிலை! இப்படிச் சுரண்டப்படும் பொருளை தொழிலாளர்கள் காண முடிவதில்லை; கைக்கு வந்தபின் கொள்ளை போவதல்ல—கைக்கு வராமலேயே கொள்ளை போவது! இதுவே கொடுமை என்னும்போது, கைக்கு வந்த குறைவான பொருளும், வேறு பல தீயசக்திகளால், கொள்ளையிட்டுச் செல்லப்படுவது அதனினும் கொடுமை அல்லவா? கிடைக்கும் ஊதியத்தை இந்த நாட்டுத் தொழிலாளர்கள் பருத்திச் சூதாட்டத்தில் மட்டுமா பறி கொடுக்கிறார்கள்? அவர்கள் அடிமையாகிவிட்டிருக்கிற—ஆண்டாண்டு காலமானவை என்ற 'பெருமை'க்குரிய—வேண்டாத, அறிவற்ற மதமூடப்பழக்க வழக்கங்களுக்கும், (ஆண்டவன் பெயரால் நிகழும்) சடங்குகளுக்கும் ஏராளமான கைப்பொருளைப் பறிகொடுக்கின்றனரே! இந்த நிலையிலிருந்தும் தொழிலாளர்கள் மாறியாக வேண்டாமா? தொழிலாளர்கள் தாங்கள் சுரண்டப்படாமல் பாதுகாத்துக்கொள்ள, தங்களை அறிந்தோ அறியாமலோ சுரண்டுகிற எல்லா தீயசக்திகளையும் எதிர்த்துப் போராட முன்வர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பின்னர் 'இந்துஸ்தான் ரோலிங் மில்' தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் ஆர். கோவிந்தசாமி பேசுகையில், தங்கள் தொழிற்சாலையில் கதவடைப்பு நடைபெற்றபோது 'நம் நாடு' இதழ், தொழிலாளருக்காக வாதாடிய முறையை எடுத்துக் கூறி, தங்கள் போராட்டம் முடிவில் வெற்றி பெற பெரிதும் உதவிய 'நம் நாடு' இதழுக்கு தொழிலாளர் சார்பில் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார். தொழிலாளர் பிரச்சினைகள் அவர் பேச்சில் இடம் பெற்றிருந்தன.

பின்னர் தோழர்கள் சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, தனபால் ஆர். இராமநாதன் ஆகியோர் தொழிலாளர்பற்றி பேசியதும், தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத் துவக்கத்தில், தொழிலாளர்களுக்கும், கூட்டத்தில் கலந்துகொண்ட பலருக்கும் ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

(ந. - நி)

செலவுத் திட்டத்தில் பிரிட்டனில் 'வெட்டு'

பாதுகாப்புச் செலவுகளும் குறைக்கப்படுகிறதென அறிவிப்பு

பிரிட்டனின் மொத்தச் செலவில், 7 கோடி 60 இலட்சம் பவுன் குறைக்கப்பட்டுவிட்டதாம்!

இதுபற்றி அறிவித்த பிரிட்டன் நிதி மந்திரி, 'பாதுகாப்புத் திட்டத்திற்கான செலவில் 3,65,00,000 பவுனும், சிவில் இலாகாக்களால் செய்யப்படும் பாதுகாப்புச் செலவுகளில் 1-கோடி 40 இலட்சம் பவுனும், சிவில் இலாகாக்களின் செலவில் 2-கோடி 55-இலட்சம் பவுனும் குறைக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டார்.

கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய விடமாட்டாராம்!

சவ மொழிதான் மந்திர மொழியாம்!

ஒரு எம். எல். ஏ.-யின் வீரப்பிரதாபம்

மதுரை, ஜூன் 28—

கோயில்களில் எல்லா மக்களும் புரிந்துகொள்ளும் முறையில் தமிழ் மொழியில் அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று தற்போது கோரப்பட்டுவருவதை முதுகுளத்தூர் எம்.எல் ஏ., திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் கடுமையாக எதிர்த்தார்; தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதைத் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்றும், குறிப்பிட்டார்; சமஸ்கிருதம், 'மந்திர மொழி' என்றும், எனவே, அந்த மொழியில்தான் கோயில்களில் பூசை நடைபெற வேண்டும் என்று அவர் கூறினார்.

இப்பிரச்சினை பற்றி 24-ந் தேதி அன்று மதுரையில் சன்மார்க்க சபை திருவருட்பா மாநாட்டில் பேசுகையில் திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் கூறியதாவது:—

"சமஸ்கிருதம் மந்திரமொழி என ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மொழிக்கும் மாத்திரையளவு, உச்சரிப்பு வழக்கு முதலிய இலக்கணங்கள் உண்டு; இந்த இலக்கணங்கள், பிசகி உச்சரிக்கப்படுமானால் அதற்கு விபரீத அர்த்தங்கள் ஏற்பட்டுவிடும்; எனவே, பழக்கத்தில் இருக்கும் நடைமுதல் மொழியை உபயோகிக்கும்போது அது சிதைவுபடுமாறு உச்சரிக்கப்படுவது சாத்தியமாகும். அதனால் அர்த்தம் மாறிவிடும் என்றே மந்திர மொழியாக சமஸ்கிருதத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

"ஆகவே, பேச்சு மொழி வழக்கில் அர்ச்சனை வைத்தால் அது சிதையும் என்பதற்காகவே மந்திர மொழி ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

"தமிழில் அர்ச்சனை செய்வதற்கு நாங்கள்விடமாட்டோம்."

'இயந்திரத் தொழிலுக்கு எதிராக நான் இல்லை'

'திட்டக் குழுவின் தொழில் கொள்கை உடன்பாடு உடையதே'

வினோபா விளக்குகிறார்

"உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்திற்கோ அல்லது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கோ நான் எதிர்ப்பாக இல்லை. சுயதேவையைப் பூர்த்திச் செய்துகொள்ளக் கூடியவர்களாகக் கிராமத்தவர்கள் இருக்கவேண்டும் என நான் கூறிவருவது, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பொருத்தேயாகும்.

"கனரகத் தொழில் அளவில் பெரும் பெரும் தொழில் நிர்மாணம் அமைவதாக இருந்தால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் கிராமத்தவர்களே வளர்த்துக்கொள்ள வேண்டும்.

"கிராம மக்களுக்கு முழுநேர வேலை தர வேறு ஒரு வழியும் இல்லை. திட்டக் குழுவால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள தேசிய கொள்கைக்கு எனது கருத்து எந்தவகையிலும் மாறுபட்டு இருப்பதன்று.

"கிராமங்களின் செழுமைக்கு, அங்கு கிடைக்கும் மூலப் பொருட்கள், அங்குள்ளார் பயன்படுத்துவதற்கென, அங்கேயே பயன்படும் பொருட்களாக உருவாக்கப்பட வேண்டும் என்றக் கோட்பாட்டை பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் ஏதாவது எஞ்சி இருந்தால், அவைகளை மட்டுமே வெளியே ஏற்றுமதி செய்யலாம்.

"மற்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துவரும் பொருட்களை மட்டுமே நகர மக்கள் உற்பத்திச் செய்துகொள்ள வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக அரிசி ஆலை, மாவு ஆலை, எண்ணெய் ஆலை முதலியவற்றைத் துவங்கி, கிராம மக்களின் தொழில் துறைகளில் குறுக்கிட்டு வருகின்றனர். அதன் விளைவாக, வேலை வாய்ப்பும், உணவும் கிராம மக்களுக்குக் கிடைக்காது செய்துவிடுகின்றனர்."

'சட்டசபையில் தாழ்த்தப்பட்டோருக்கு தனியிடம்

ஒதுக்கப்படுவது நீடிக்க வேண்டும்'

மைசூர் முதலமைச்சர் கருத்து

ஹூப்ளி, ஜூன் 28—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, சட்டசபையில் இடம் ஒதுக்கித் தருவது இன்னும் நீடிக்கத்தான் வேண்டும் என்ற கருத்தை மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா வெளியிட்டிருக்கிறார்.

பம்பாய்—கருநாடக தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறினார்:—

"கன்னடியர்கள் இப்போது பெற்றிருக்கிற அரசியல், நிர்வாக ஒற்றுமை, இதயபூர்வமான ஒற்றுமையாக வளரவேண்டும். 30 ஆண்டுகள் மிகக் கஷ்டப்பட்ட பிறகே, அரசியல் ஒற்றுமையைப் பெற கன்னடியரால் முடிந்தது."

மேலும் அவர் கூறினார்:—

"தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் களைவதற்கு, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில், சாதி இந்துக்கள் ஒத்துழைக்கவேண்டும்."

சர்க்கார் அலுவலகங்களில்

இலஞ்ச ஒழிப்பு!

நடவடிக்கைகள் பற்றி விளக்கம்

புதுடில்லி, ஜூன் 28—

மத்திய உள் விவகார மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த விசேட போலீஸ் நிறுவனம் 1956-ம் ஆண்டில், மொத்தம் 1,231 வழக்குகளில் புலன் விசாரணை செய்தது; அவைகளில் மொத்தம் 2,158 பேர் சம்பந்தப்பட்டிருந்தனர். அத்துடன் 1,002 பேர் சம்பந்தப்பட்டிருந்த 689 புகார்கள் பற்றியும் விசாரணை நடத்தியது.

அவற்றில், 469 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன; அவைகளில் 851 பேர் சம்பந்தப்பட்டிருந்தனர். இவை தவிர, 457 பேர் சம்பந்தப்பட்டிருந்த 252 வழக்குகள், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரவை அல்லது இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டன.

குறிப்பிட்ட ஆண்டில் அபராதத் தொகைகள் மூலம் மொத்தம் ரூ. 6,45,650 வசூலிக்கப்பட்டது.

புலன் விசாரணை செய்யப்பட்ட வழக்குகளில், கெஜட் பதிவான அதிகாரிகள் 121 பேர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

குறைந்த வருமானமுள்ளவருக்குக்

குடியிருப்பு வசதி

சென்னைக்கு மத்திய சர்க்கார் வழங்கிய கடன் உதவி

புதுடில்லி, ஜூன் 28—

குறைந்த வருமானத் தொகுதியினருக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான திட்டத்தின்கீழ், இந்திய சர்க்கார் ஏப்ரல் மாதத்தில் அசாம் சர்க்காருக்கு ரூ. 8,61,000-ம், மே மாதத்தில் சென்னை சர்க்காருக்கு ரூ. 1,20,000-ம் கடன் தொகைகள் வழங்கியுள்ளனர்.

1954-ம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், இந்திய சர்க்கார் 30 ஆண்டுக் கடன் தொகைகளை $4\frac{1}{2}$ சதவிகித வட்டியில் மாநில சர்க்கார்களுக்குக் கொடுக்கிறது; மாநில சர்க்கார்கள், அத்தொகைகளைத் தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் கடனாகக் கொடுத்து, அவர்கள் வீடுகள் கட்டுவதற்கு ஊக்கமளிக்கின்றனர்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்திட்டத்தின்கீழ், மத்திய சர்க்கார் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் மொத்தம் ரூ. 11,05,60,000 கடன் தொகைகளாகக் கொடுத்துள்ளனர்.

உணவுத் தானியம் களவாடப்பட்டதாம்

டாக்கா, ஜூன் 26—

பைரவ பஜார் 'இரயில்வே கூட்ஸ்' நிலையத்தில் 4 வாகன்களில் இருந்த உணவுத் தானியம் இன்று விடியற்காலையில் களவாடப்பட்டதென்று தகவல் கிடைத்ததாகத் தெரிகிறது.

அல்ஜீரியா பிரச்சினை: நிகழ்ச்சி நிரலில் சேர்க்க ஐ. நா. சபை மறுப்பு!

பிரரேபணைக்கு எதிராக மேற்கு நாடுகளின் கூட்டு எதிர்ப்பு

நியூயார்க், ஜூன் 27—

நிகழ்ச்சி நிரலில், அல்ஜீரியா பிரச்சினையை சேர்க்க வேண்டுமென்கிற அரபு—ஆசிய கோரிக்கையை, ஐ. நா. பாதுகாப்பு சபை நிராகரித்துவிட்டது. மேற்கு நாடுகளின் கூட்டான எதிர்ப்பினால், பிரரேபணை தோல்வியுற்றது.

13 அரபு—ஆசிய நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க, ஐ. நா. பாதுகாப்பு சபை கூடியது.

கோரிக்கையை பாதுகாப்பு சபை ஏற்பது சந்தேகமெனக் கருதி, அப்பிரச்சினை பற்றிய விவாதத்தைக் காலவரையறையின்றி ஒத்திவைக்க வேண்டுமென்று ரஷ்யா திடீரென ஒரு பிரரேபணை கொண்டுவந்தது; ஆனால், அது நிராகரிக்கப்பட்டுவிட்டது.

ஆங்கிலமே போதனு மொழியாக இருக்கும்

குஜராத்தி பல்கலைக் கழக முடிவு

அகமதாபாத், ஜூன் 26—

இடைக்கலை வகுப்பிற்குப் பிறகு உள்ள கல்வி வகுப்புகளில், ஆங்கிலத்தையே தொடர்ந்து போதனு மொழியாக 1961-ம் ஆண்டுவரை வைத்துக் கொள்வது என்று குஜராத்தி பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கிறது.

இந்தத் தீர்மானம், பல்கலைக் கழக செனட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டபோது, துணைவேந்தர் எச். வி. திவாதியா தலைமை தாங்கியிருக்கிறார்.

மறைந்த சொ. முருகப்பா

கோவை, ஜூன் 29—

திரு. சொ முருகப்பா அவர்களின் மறைவு குறித்து திரு மெ. சுந்தரம் அவர்கள் எழுதியதாவது:

"சில நாட்களுக்கு முன்னர் மறைந்த திரு. சொ. முருகப்பா அவர்கள், ஒரு சிறந்த சீர்திருத்தச் சிற்பியாவர். 'செட்டிநாட்டு மன்னனுக்குச் சீர்திருத்தச் செடி முளைக்குமா?' என்று பலர், உள்ளத்திலிருந்த பலமான சந்தேகத்தை முதன் முதல் போக்கி வெற்றிகண்ட வீரர் அவர். விதையை ஊன்றிப் பழத்தையும் சுவைத்தவர். சமுதாய ஆற்றில் எதிர் நீச்சல் போட்டு மாதர் மறுமணம், கலப்பு மணம் முதலிய இயக்கங்களைக் கண்டு வாகை சூடியவர்.

"இலக்கிய வானிலும் இவர் ஒளிவிடும் நட்சத்திரமாக விளங்கினார். நுட்பமாகப் பொருள் காணும் திறனும், கருத்துக்களை ஆராய்ந்து கொள்ளும் முறையும் இவர்கள்பால் பெரிதும் காணப்பட்டன. தமிழிசை இயக்கத்திற்கு இவர் புரிந்த தொண்டுகள் அளவற்றனவாகும். 'குமரன்'வார இதழ் மூலம் இவர் இணையில்லா இலக்கியத் தொண்டு புரிந்து வந்ததைத் தமிழகம் நன்கு அறியும்.

"இவர் தம் வாழ்நாளில் 'தொண்டலால் துணையுமில்லை' என்ற ஆன்றோர் மொழிக்கு இணங்கத் தொண்டு பல இயற்றி மூத்து உயர்ந்தார். இவர் தொண்டின் நினைவுச் சின்னங்களாக இப்பொழுது இருப்பன மகளிர் இல்லம், ஏழை மாணவர் விடுதி முதலியன, மாண்டிசோரிக் கல்வி முறையில் இளங்குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வெற்றிகண்டவர்.

சமுதாயம், அரசியல், இலக்கியம், செய்தித் தாள், கல்வி ஆகியவற்றில் தன்னலமற்றுத் தொண்டாற்றிய இவருடைய பெரும் பிரிவு தமிழ் மக்களைப் பெருந்துயரில் ஆழ்த்துகிறது.

"இவருடைய பிரிவால் ஆற்றொணாத்துயர் அடைந்திருக்கும் இவரது குடும்பத்தாருக்கும், அன்பர்களுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. இவருடைய சீரிய தொண்டுகள் சிறந்து, தொடர்ந்து நடைபெறத் தமிழ்ப் பெருமக்கள் ஆவன புரிவாராக."

சக்கரவர்த்தியார் சகுனியாகிருர்!

முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடி போடுகிருர்!

நாகர்களுக்கும் திராவிடத் தனிநாடு கோருவோருக்கும் பொருத்தம் பார்க்கிருர்!

அடக்கி அழிக்க வேண்டுமென அலறுகிருர்!

அருந்துணைக்கு வரும்படி இந்திய அரசாங்கத்தை அழைக்கிருர்!

சென்னை, ஜூன் 28—

“ நாட்டின் தொலைவு மூலையில் உள்ள மிகச் சில நாகர்கள், தங்களுடைய மலைப் பகுதியை சுதந்திரப் பிரதேசமாக ஆக்க விழைகின்றனர். அதற்கு எதிராக இந்திய அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டது. அதன் விளைவாக அவர்களுடைய கிளர்ச்சி சீரழிந்து வருகிறது.

“ மிகச் சிறிய நிலப்பரப்பைப் பொறுத்த விவகாரத்திலேயே நிலைமை அதுவானல், இந்தியாவின் மற்றப் பகுதியிலிருந்து தெற்கை துண்டித்துவிட ஏதாவது முயற்சி மேற்கொள்ளப்படுவதால் ஏற்படும் நிலைமையை,ஒருவரால் இலகுவாக யூகித்து உணர்ந்துகொள்ள முடியும்.

“ இந்த அபாயகரமான முயற்சிக்கு தெற்கில் துளியும் இடம் தரக்கூடாது. இந்திய அரசாங்கத்திற்குட்பட்ட தெற்கில் ஒரு பெரிய இராஜ்யம் நிறுவப்படவேண்டும் என்ற கருத்துடன், அதைப் பெற பணியாற்ற வேண்டும்.”

இந்த ‘அரிய’ அறிவுரையை இந்தியப் பேராசிற்கு, கல்லறையில் ஒரு காலை வைத்துக்கொண்டிருக்கின்ற சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், சென்னை ‘உட்லண்டு’ உணவு விடுதியில் நடைபெற்ற, தனது சிருஷ்டியான தட்சிணப் பிரதேச குழு கூட்டத்தில், விரல்விட்டு எண்ணிவிடக்கூடியவர் இடையில் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

தேபருக்கு தாண்டன் சூடு!

‘ஆமாம் சாமி’களாயிருப்பது அழகல்ல!

அலகாபாத், ஜூன் 28—

‘ உண்மையிலேயே பிரதமர் நேருவை நேசிப்பவர்களானல்—மதிப்பவர்களானல், அவருக்கு விருப்பமில்லாத எதையும் எவரும் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்’ என்று, நேரு, காங்கிரசிற்குப் பெற்றுத் தந்த ‘அருமைத் தலைவர்’ தேபர் விடுத்திருந்த அறிக்கையை, முன்னுள் காங்கிரஸ் தலைவர் தாண்டன் கண்டித்துள்ளார்.

இங்குள்ள காங்கிரசின் சேவாதள முகாமில் பேசிய தாண்டன் குறிப்பிட்டதாவது :—

“நான்கூட நேருவை நேசிப்பவன்தான்; ஆனல், பல விவகாரங்களில், அவருக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவன் நான். தேபர் விடுத்திருக்கிற வேண்டுகோளை, நேருவேகூட ஏற்றுக்கொள்ளமாட்டார். காந்தியார் விருப்பத்திற்கு விரோதமானவற்றை நேரு செய்யவில்லையா?

“இந்தியாவைப் பிரிப்பதற்கு காந்தியார் ஒருக்காலும் ஒருப்படவில்லை; ஆனல் நேருவும், காங்கிரஸ் செயற் குழுவும், காந்தியாரின் விருப்பத்திற்கு மாருக பிரிவினையை ஒப்புக்கொண்டு தீர்மானம், நிறைவேற்றினுர்கள். ஒரு கட்சியில் எல்லோரும் ‘ஆமாம் சாமி’களாக இருக்க வேண்டுமென்பது அரசியலாகாது.”

ஆர்.எம்.எஸ். ஊழியர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டும்; அல்லது சீசன் டிக்கெட் தொகையை மீண்டும் தரவேண்டும் என்றும் தம் கோரிக்கையை நேரில் தெரிவிக்க, மேற்படி ஊழியர்களின் அகில இந்திய தேசிய சம்மேளனத் தலைவர்கள் முயன்றபோது, அவர்களுக்குப் பேட்டி கொடுக்கவும் மேலதிகாரிகள் மறுத்துவிட்டதாகவும், செய்யவேண்டிய பல வசதிகளைச் செய்யாமற் போனலும், செய்திருக்கின்ற சிறு சிறு சலுகைகளையும் நிறுத்திவிடுவது மிகவும் வருந்தத்தக்க செயலாக இருக்கிறது என்றும், இதனலெல்லாம் மிகவும் மனம் நொந்துபோயுள்ள சென்னை அஞ்சல் பிரிப்பக ஊழியர்கள் வேறு வழியின்றி அதிகாரிகளின் கவனத்தைத் தம் பக்கம் திருப்ப, வருகிற ஜூலை 2-ந் தேதி ஊதியம் வாங்கப் போவதில்லை என்று அதிகாரிகளுக்குத் தெரிவித்திருப்பதாயும், அவர்கள் ‘யூனியன்’ செயலாளர் அறிவிக்கிருர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

30—6—56 இரவு 7 மணிக்கு, பனைமரத்தொட்டி, திருவேங்கட நாய்க்கன் தெரு, 8-ம் எண் இல்லத்தில், திரு. அ. ஞானசுந்தரம், திருக்குறளில் ‘நீத்தார் பெருமை’ எனும் தலைப்பில் பேசுவார்.

பெங்களூர்—பிளாக்பள்ளி தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம்

1—7—56 காலை 9 மணியளவில், கழகப் பணிமனையில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்- அதுபோது, அண்ணு அவர்கள் பெங்களூர் வருகை, கழக ஆக்க வேலைகள் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

இலக்கிய சொற்போர்கூட்டம்

சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத்தொட்டி, அட்டபாளையம் பஜனைக் கோவிலில், 1—7—56 காலை 9-30 மணியளவில், ஓர் சொற்போர் கூட்டம் நடைபெறும். திரு. ந. சண்முகனுர் தலைமையில் ‘தட்சிணப் பிரதேசம் தேவையா?’ என்ற தலைப்பை, தோழர்கள் பி. எம். லட்சுமிகாந்தம் ஒட்டியும்—மு. செ. சிவப்பிரகாசம் வெட்டியும் சொற்போர் நிகழ்த்துவர்.

வடசென்னை குறள்நெறிக் கழகம்

30—6—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, கழக அறையில் (எண் 59, மன்னர் சாமி கோவில் தெரு), சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். திரு. கோபால் தலைமையில், ‘விடுதலை’ எனும் பொருள் குறித்த தோழர்கள் பலர் பேசுவர். பின்னர் புலவர் கி தியாகராசன் அவர்கள், குறள் வகுப்பு நடத்துவார்.

தாய்மார் கழகப் பொதுக்கூட்டம்

1—7—56 பிற்பகல் 3 மணிக்கு மேல் சென்னை, திருப்பள்ளித் தெரு, 80-ம் எண் இல்லத்தில், பேராசிரியர் மயிலை-சிவ. முத்து தலைமையில், சென்னை பெத்து நாய்க்கன் பேட்டைத் தாய்மார் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் அன்புப்பழம்நீ அனைவரையும் வரவேற்பார்; தோழியர்கள் தாமரைக்கண்ணி, கலைச்செல்வி, பார்வதியம்மை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். திரு. வே. மாணிக்கம்(முதலியார்) குழந்தைகளுக்குப் பெயரிட்டு வாழ்த்துவார். குழந்தைகளின் ஆடல்பாடல்களும் உண்டு; திருக்குறள் வகுப்பும் நடைபெறும்.

‘உரிமைக் குரல்’

“ ‘உரிமைக் குரல்’ ஆசிரியர் வி. எஸ். முருகன் அவர்களுக்கு உடல் நலமின்மையால் மருத்துவ மனையில் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிருர்; அதன் காரணமாக ‘உரிமைக் குரல்’ தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.”

என்று, நிர்வாகி செ. கருணாநிதி அறிவிக்கிருர்.

கழகக் கூட்டம்

★

திருமழிசை :

பெருமாள் கோயில் அருகில்

1—7—56 மாலை 6 மணிக்கு

தி. மு கழக 3-வது ஆண்டு விழா

தலைவர் :

டி. கே. போஜராான்

பேசுவோர் :

அண்ணு

என். வி. நடராசன்

டி. சண்முகம், எம்.எல்.ஏ.

சி. வி. எம். அண்ணுமலை

★

குடந்தை :

உப்புக்காரத் தெருவில்

1—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

கே. கே. நீலமேகம்

பேசுபவர் :

ஈ. வெ. கி. சம்பத்

தோழர் எஸ். பத்மநாபன் கொடியேற்றுவார்; மன்னர்குடி சுந்தரேசன் இன்னிசை வழங்குவார்.

★

காரைக்குடி:

காந்தி சதுக்கம்

1—7—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

கண்ணதாசன்

கி. மனோகரன்

மு. வசனப்பித்தன்

★

கீழ்வேளூர் :

3—7—56 மாலை 6 மணிக்கு

தி. மு. கழக 5-வது ஆண்டு விழா

பேசுபவர் :

ஈ. வெ. கி. சம்பத்

சென்னை 27-வது வட்ட தி. மு க. செயற்குழுக் கூட்டம்

1—7—56 பிற்பகல் 2 மணியளவில், இடைப்பாளையம், அனுமந்தராயன் கோயில் தெரு, எண் 32 இல்லத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு, பொதுக்கூட்டம் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை 41-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

30—6—56 மாலை 6 மணியளவில், திருவல்லிக்கேணி, கருப்பாணியம்மன் கோவிலில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுக்கூட்டம் பற்றியும், மற்றும் பல முக்கிய பிரச்சினைகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 12-வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

1—7—56 காலை 9 மணியளவில், இப்ராம்ஜி சாகிப் தெரு, எண் 1/1 இல்லத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சூளை நகர இளைஞர் கழகம்

30—6—56 மாலை 6-30 மணியளவில், மாணிக்க செட்டித் தெரு, எண் 10, கழக மனையில், தோழர் எஸ். எம். பாசில் ‘பௌத்தமும்—தற்காலப் பிரச்சினைகளும்’ என்பது பற்றிப் பேசுவார்.

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக 4-வது ஆண்டு விழா

1—7—56 மாலை 5 மணிக்கு, சென்னை 3-வது வட்ட கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக 4-வது ஆண்டு விழா, மணிகண்ட முதலி 3-வது தெருவில் (இராபின்சன் பார்க் சமீபம்) தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி; வி. முனுசாமி எம்.சி., மாணவி எஸ். பி. சற்குணம் ஆகியோர் பேசுவர்.

தேனி நெடுஞ்செழியன் மன்றம்

மேற்படி மன்றச் சார்பில், தோழர் கே. பி. பி. எம். நாராயணசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கோவை-செழியன், சிற்றுளி-சுப்பிரமணியம், கல்கத்தா-இராமசாமி, மு. தங்கராசன், ரெ. சமுத்திரக்கனி ஆகியோர் பேசுவர்.

குறிப்பு : தேதி குறிப்பிடப்படவில்லை.

கலைமணி மன்றம் துவக்க விழா

1—7—56 மாலை 4 மணியளவில், சென்னை — சிந்தாதிரிப்பேட்டை, எண் 16, இராசகோபால் நாயக்கர் தெரு மண்டபத்தில், தோழர் டி. பி எம். சாமி தலைமையில் நடைபெறும். திறப்பாளர் : தோழியர் கலைச்செல்வியார்; பேசுவோர் : தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், ப. க. வேணுகோபால், கலைமணி; இன்னிசை : பி. எம் சாமி வாத்தியக் குழுவினர்கள்—தோழியர் பிரேமா, தோழர்கள் எம். சே. சேகர், திருமுல்லைவாயில்நாதன்

காவியக் கலை அரங்கம் நாடகத் துவக்க விழா

1—7—56 மாலை 4-15 மணியளவில் சென்னை—இராயபுரம், ஆண்டியப்ப கிராமணி தெருவில், தோழர் எஸ். எஸ். பி லிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ் டி. சுந்தரம், வே. கபிலன், என். வி. மதிவண்ணன், கோ. செயராமன் ஆகியோர் பேசுவர்.

‘அம்பிகாபதி’ — நாடகம்

30—6—56 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு, திருக்கழுக்குன்றம் அடுத்த தேசுமுகப் பேட்டையில் திரு. ந. மாணிக்கம் தலைமையில், புரட்சிப் புலவன் ‘அம்பிகாபதி’ எனும் நாடகம், முத்தமிழ் மன்றத்தினரால் நடைபெறும்

ஆர். எம். எஸ். ஊழியர் கூட்டம்

ஆர். எம். எஸ். ஊழியர்கள் (‘சார்ட்டிங்’ பிரிவு) போக்கு-வரத்துப்படிச் சலுகை கோரி, ஜூலை 2-ல், சம்பள மறுப்பு இயக்கம் நடத்துவதை ஒட்டி, 30—6—56 மாலை 3 மணியளவில், ஆர். எம். எஸ். ‘சார்ட்டிங்’ அலுவலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறும்.

தோழர் எம். இராமலிங்கம் (பிள்ளை) தலைமையில், தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், ஜி. இலட்சுமணன், வி. ஆர். சௌந்தரராசன், ஆர். முனிரத்தினம் ஆகியோர் பேசுவர்.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா — இல்லையெனில், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிருேம்.

—தலைமைக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.